# ஒரு அழகிய தீவு.

வணக்கம்

ஒரு அழகிய தீவு.

நான்கு பக்கமும் கடல் சூழ்ந்து இருக்கிறது .

நான்கு பக்கம் என்று சொல்வதை விட

அறிவியல் பூர்வமாக 360 டிகிரி கோணத்திலும் கடல் சூழ்ந்து இருக்கிறது

அது ஒரு இயற்கை எழில் சூழ்ந்த அழகிய தீவு.

அங்கே ஒரே ஒரு குடும்பம் மட்டும் வசிக்கின்றது

கணவன், மனைவி, ஒரு மகன், ஒரு மகள்

அந்த குடும்பத்திற்கு தேவையான அளவில் விவசாய பொருட்கள்

அங்கே மானாவாரியாக விளைகின்றன.

கூடவே கோழி ஆடு மாடு மயில் பறவைகள் என இயற்கை சூழலில்

அங்கு தானாகவே வளர்ந்து கொண்டிருக்கின்றன .

ஒரே வரியில் சொல்வதென்றால்

பருத்தி கூட புடவையாய் காய்க்கிறது என்று தான் சொல்ல வேண்டும் .

வெளி உலக தொடர்பு இல்லாததனால்

அவர்கள் கல்வியிலும்

பண்பாட்டிலும்

வளர்ச்சியும், தொடர்பும் இல்லாமல்

பின்தங்கி இருந்தனர்.

மற்ற நாடுகள், மனித இனம் செழிக்க

இந்த பூமியில், மனிதர்கள் வேறெங்கிலும் வசிக்கின்றரா

# ஒரு அழகிய தீவு.

என்று எல்லா நாடுகளிலும் ,

எல்லா தீவுகளிலும்,

அல்லது

மற்ற கோள்களுக்கும் இராக்கெட் அனுப்பி தேடிக் கொண்டிருக்கின்றனர்.

அதன் வரிசையில்

இவர்களது தீவுகளுக்கும்

மற்ற நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் கப்பல் மூலமாக வந்து உதவி வேண்டுமா?

எங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்கிறீர்களா?

என்று கேட்டனர்.

இயற்கை எழில் மானாவாரியாக சூழ்ந்திருந்த காரணத்தால் இவர்கள் யாருடனும் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பவில்லை.

காலம் கடந்து கொண்டே இருந்தது.

பருவ வயது அடைந்த பிறகு

தனது மகளுக்கும், மகனுக்கும் திருமணம் செய்து வைக்க பெற்றோர்கள் எண்ணினார்கள்

இவர்களது வெளியுலக தொடர்பு முற்றிலுமாக

இவர்களாலேயே துண்டிக்கப்பட்டு இருந்தது.

இவர்களிடம் படகோ, கப்பலோ எதுவுமே இல்லை.

ஏற்கனவே அவர்கள் வெளி உலக தொடர்பை மறுத்து விட்டதனால்

கடல் கடக்க முடியாமலும்,

# ஒரு அழகிய தீவு.

மற்ற நாடுகளுடன் உறவு வைத்துக் கொள்ளவும் முடியவில்லை!

இதற்கு மேல்

இந்த கதையை விவரிக்க வேண்டிய அவசியம் இல்லை

இதன் தொடர்ச்சியும்,

முடிவும் என்ன ?

என்பதை உங்களின் வளமான கற்பனைக்கே விட்டு விடுகின்றோம்.

கிட்டத்தட்ட இஃதைப் போலவே நாமும் இருக்கின்றோம்.

கூட்டுக்குடும்பம் என்கின்ற உறவுக்கூட்டத்திலிருந்து பிரிந்து வந்து தனித்தீவில் வாழ்ந்து வந்து கொண்டிருக்கிறோம்.

இன்று நமது மகன்/மகளுக்கு திருமணம் செய்ய நினைக்கும் பொழுதுபொழுது

உறவுப் பாலமும் இல்லாமல்

தேவையான படகும், கப்பலும் இல்லாமல்

இந்த வாழ்க்கை கடலில்

பயணித்து வெற்றிகான துடிக்கின்றோம்

இது எப்படி சாத்தியம் ?

என்பதை நாம் அனைவரும் யோசிக்க வேண்டிய விஷயம்.

மற்றவர்கள் உங்களுக்கு உதவி செய்ய நினைத்தாலும்

நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று உலகிற்கு

உங்களை அடையாளம் காட்ட

# ஒரு அழகிய தீவு.

மற்றவர்களின் கண் பார்வையில்

நீங்களும் இல்லை.

உங்கள் உறவினர்களும் இல்லை.

அதற்காகத்தான் *ஙப்போல் வளை* என்கின்ற உறவினர் பட்டியல்.

இந்த பட்டியலில் உங்கள் மகன் அல்லது மகளுக்கு திருமணத்திற்கு

நமது குலால உறவினர்கள் எத்தனை பேரை அழைக்கப் போகிறீர்களோ

அததுனை பேர்களையும் பட்டியலிடுங்கள்.

இதுதான் உங்களுக்கு சோதனையாக இருக்கலாம்.

அதனால்

இந்த பட்டியலில் உள்ள முக்கியத்துவத்தை சொல்லி விடுகின்றோம்.

உங்களையோ

உங்கள் பெற்றோரையோ யாருக்கும் நேரடியாக தெரியாது.

ஆனால் இவன் என்னுடைய பேரன்

இவள் என்னுடைய மகள் வழிபெயர்த்தி

இவன் என் தங்கை மகன்

இவள் என் சகலையின் மகள்

இவன் என் சின்ன மாமனாரின் பெயரன்

என்று அறிமுகப்படுத்தும் போது தான் உங்களின் மதிப்பு பலமாய்க் கூடும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

# ஒரு அழகிய தீவு.

*முதல் நிலை உறவினர்கள்*

முதலில் ஒன்றிலிருந்து 15 வரை நீங்கள் எழுதுகின்ற உறவினர்கள் அனைவரும் உங்கள் குடும்பத்திற்குள்ளே இருப்பார்கள்.

இவர்கள் நமது ஜாதகத்தில் உள்ள கிரக நிலைகள் போன்றவர்கள்.

இந்த கிரகங்களில் ஒரு சிலர் தவிர அனைவருமே நல்லது செய்ய நினைப்பார்கள். ஒரு சிலரோ இராகு, கேது, செவ்வாய் போன்றும் இருப்பார்கள்.

*இரண்டாம் நிலை*

எண் 15 இல் இருந்து 30 வரை உள்ளவர்கள் இரண்டாம் நிலை உறவினர்களாக இருப்பார்கள்

அதாவது உங்கள் சம்மந்தியின் உறவினர்கள், உங்கள் பங்காளியின் உறவினர்கள் என இருப்பார்கள்,

இவர்கள் அனைவரையும் தாண்டி

எந்தவித பாரபட்சமும் இல்லாமல்

பொருளாதாரம், கல்வி என்கின்ற

எந்தவித உள் பாரபட்சமும் இல்லாமல்

கிராமத்தில் உள்ள அனைவரின் பெயர் மற்றும் செல்போன் நம்பரை எழுத ஆரம்பிப்போம்.

மூன்றாம் நிலை உறவினர்கள்

எண் 31 லிருந்து நாம் எழுதப்போகும் உறவினர்கள் இந்த மூன்றாம் நிலை உறவினர்கள்.

அதாவது நமது சமூகத்தை சார்ந்தவர்கள்

# ஒரு அழகிய தீவு.

இவர்களில் பெரும்பாலானோர் பொருளாதாரத்தில், கல்வியில் தாழ்ந்துதான் இருப்பார்கள்.

ஆனால் இவர்கள் தான் மேகம் போன்றவர்கள்.

நமது வீட்டிற்கு இவர்களை இவர்கள் வந்து சுண்ணாம்பு அடித்து கொடுத்திருக்கலாம்.

மின்சார ரிப்பேர் செய்திருக்கலாம்.

கார்பெண்டர் வொர்க் செய்திருக்கலாம்.

விவசாய வேலைசெய்திருக்கலாம்..

வெள்ளையடித்து கொடுத்திருக்கலாம்,

. . . . . .

இது எண்ணற்ற பல வேலைகளை செய்திருப்பார்கள்.

அவர்கள் தான் நமக்கு இரண்டு விதத்தில் உதவி செய்வார்கள்.

1)

அவர்களுடைய சம்மந்திகள்,/ சகலை அல்லது பங்காளியின் உறவினர்கள்

பொருளாதாரத்தில் கல்வியிலும் உயர்ந்து

உங்களுக்கு இணையாக மாப்பிள்ளைகளையோ மணமகளையோ தேடிக் கொண்டிருப்பார்கள்.

இந்த மூன்றாம் நிலை உறவினர்கள் மூலம்தான். உங்களின் விவரங்கள் அவர்களுக்கு மழை பொழிவது போல் எளிதாக பரிந்துரைக்கப்படும்.

2)

சமீபத்தில் அப்பார்ட்மெண்ட் கலாச்சாரம் மிகவும் பெருகி உள்ளது. எதிர் வீட்டில் உள்ளவர்கள் யார் என்று தெரியாமலேயே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

# ஒரு அழகிய தீவு.

நமது குலால இன உறவினர்கள் கூட அதே கட்டிடத்தில் பல வருடங்களாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

ஆனால் நமது இனம் என்று பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் தெரியாமல் இருப்பார்கள்.

இந்த மூன்றாம் நிலை உறவினர்கள் மூலம்தான் அவர்கள் எளிதாக அடையாளம் காட்டப்படுவார்கள்

உங்களது விவரங்கள் அவர்கள் அனைவருக்கும் எளிதாக எடுத்துச் செல்லப்படும்

மேலும் அவர்கள் உங்கள் ஊரிலேயே

உங்கள் மாவட்டத்திற்கு உள்ளேயே

வேலை செய்வதால்

வேலை செய்து கொண்டிருப்பதால்

உங்கள் ஊருக்குள்ளேயே,

உங்கள் மாவட்டத்திற்கு உள்ளேயே

நீங்கள் எதிர்பார்க்கும் உறவுகள் மலரும்.

மேலும் உங்கள் உறவினர்கள் பட்டியலை இந்த 30 என்கின்ற எண்ணிற்குள் அடக்கி விடாதீர்கள்.

உங்கள் மகன்/ மகள் திருமணத்திற்கு எவ்வளவு குலால உறவுகளை அழைப்பீர்களோ

அவ்வளவு குலால

உறவினர்களின் பெயர்,

ஊர் ,

செல் நம்பர்

மணமக்களுக்கான உறவுமுறை

# ஒரு அழகிய தீவு.

ஆகியவற்றை எழுதி எங்களுக்கும் அனுப்புங்கள்,

இந்த பட்டியலை நீங்கள் தயாரித்தால்தான்

உங்கள் பலம் என்ன

உங்களின் பலவீனங்கள் என்னென்ன

என்பது உங்களுக்கே தெரிய வரும்

ஒன்றிலிருந்து 30 வரை மட்டும்தான் உள்ள உறவினர்களை மட்டும் தான்

உங்கள் வீட்டின் நிச்சயதார்த்தத்திற்கு அழைப்பீர்கள்.

முழு பட்டியலில் உள்ளவர்களை கல்யாணத்திற்கு மட்டும் தான் அழைப்பீர்கள் என்பதும் கண் கூடு.

கேட்காத கடனும் பாழ்.

பார்க்காத பயிரும் பாழ்

என்பது போல இந்த 3ம் நிலை உறவினர்களை ஆதரிக்காத வரை நமக்கு எந்தவித முன்னேற்றமும் கிடைக்காது.

இந்த பட்டியலை அழகாக, நேர்த்தியாக வீட்டில் உள்ள அனைவரும் உட்கார்ந்து சமரசமாக பேசி தயாரித்து

முதலில் வீட்டில் காலண்டர் போல் மாட்டி வைக்கவும்.

வரும்பொழுதும் போகும்போதும் இந்த பட்டியலை பார்க்க பார்க்க பார்க்கதான் நமக்கு பல விஷயங்கள் தானாக புலப்பட ஆரம்பிக்கும்.

அதே சமயத்தில் அந்த பட்டியலை excel / pdf பைலில் தயாரித்து வாட்ஸப்பிலேயே எங்களுக்கும் அனுப்பி வையுங்கள்

அப்போதுதான் அவர்கள் அனைவரையும் எங்கள் வாட்ஸ் அப் குழுவில் வாட்ஸ் அப் குழுவில் உறுப்பினர்கள் ஆக்கி,

அவர்கள் மூலமாக வருகின்ற ஜாதக பதிவுகள் உங்கள் அனைவருக்கும் கிடைக்குமாறு ஆக்கப்பூர்வமான பணி செய்ய முடியும்.

# ஒரு அழகிய தீவு.

உழுகிற நாளில் ஊருக்கு போனால்

அறுக்கிற நாளில் அறுக்கின்ற நாளில் ஆள் தேவையில்லை என்பது சொல்வது போல . . ..

கூட்டுக் குடும்பத்தின் மகிமை இப்பொழுது தெரிகிறதல்லவா!!!!

நன்றி வணக்கம்

நல்வாழ்த்துக்கள்

குலாலர் மணமாலை ஆர்வலர்கள்

#Kulalar **சொக்கலிங்கம்** Rtd.HVF 9444075508

#Kulalar வேலூர் பிரகாஷ் Railways 9445173693

#Kulalar வஸந்த் கேட்டரர்ஸ் பூவண்ணன் 9094544776

#Kulalar www.kulalars.com **சங்கரன்**- M.A, M.C.A 9444452633

= = = = =

பி, கு

உங்கள் வீட்டில் லேப்டாப் அல்லது டெஸ்க்டாப் கம்ப்யூட்டர் இருந்தால் உங்கள் உறவினர்கள் பெயர்களை

பெயர்

# ஒரு அழகிய தீவு.

செல் நம்பர்

உறவு முறை ஊர் பெயர்,

ஆகியவைகளை

எக்ஸெல் பைலில் டைப் செய்து

அந்த எக்ஸ் எல் பைலை எங்களுக்கு அனுப்பவும்.

நீங்கள் கையால் எழுதி அனுப்பும் விவரங்கள்/ செல் நம்பர்களை நாங்கள் கம்ப்யூட்டரில் பதிவு செய்து

whatsapp குருப்பில் வெளியிட சில நாட்கள் ஆகலாம்